402

402

திருக்குறள் மலர்

— விளக்க உரை —

OFFICE OF THE ... MADRAS 22 ...

இரண்டாம் இதழ்

[ஏழாம் வகுப்பு—இரண்டாம் பாரம்]

(16-6-1948-ல் அரசியலாரால் திருத்தி வெளியிடப் பெற்ற பாடப்பட்டியின்படி தொகுக்கப்பெற்ற 50 குறள்களைக் கொண்டது)

உரையாசிரியர்:
வித்துவான் கோ. இரத்தினம் பிள்ளை,
தமிழாசிரியர்,
பொன்னையா உயர்நிலைப்பள்ளி,
திருச்சிராப்பள்ளி.

TB
031, 1C5
N48
130148

திருக்குறள் மலர்

— விளக்க உரை

இரண்டாம் இதழ்

[ஏழாம் வகுப்பு—இரண்டாம் பாரம்]

OFFICE OF THE REGISTRAR OF BOO[KS]
22 NOV 1948
MADRAS

[16-6-48.ல் அரசியலாரால் திருத்தி வெளியிடப் பெற்ற பாடப் பட்டியின்படி தொகுக்கப் பெற்ற 60-குறட்பாக்களைக் கொண்டது.]

உரையாசிரியர் :
வித்துவான் கோ. இரத்தினம் பிள்ளை
தமிழாசிரியர், பொன்னையா உயர்நிலைப்பள்ளி, திருச்சிராப்பள்ளி.

T. G. கோபால் பிள்ளை
பதிப்பாளர்
தெப்பக்குளம் திருச்சிராப்பள்ளி | 2/27, பிராட்வே ஜி. டி. சென்னை

பதிப்புரிமை] [விலை அணா நான்கு

130148
TB
031;105(7)
N48

முகவுரை

வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
மாதினினிய உயிர் நிலையை
உள்ளந் தெளிவுறப் போற்றுவமே—என்றும்
உத்தமராகி ஒழுகுவமே—

[illegible]னக் கவிமணி அவர்களால் போற்றப்படும் திருக்குறளானது சிறந்த குறள் வெண்பாக்களால் ஆகியதோர் உயர்ந்த நூலாகும். திரு+குறள். திரு என்பது அழகு, மேன்மை, உயர்வு, சிறப்பு முதலியவற்றைக் குறிக்கும். குறள்—ஈரடி வெண்பா.

இந்நூல் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பகுப்புகளைக் கொண்டதாய், அதிகாரம் ஒன்றிற்குப் பத்து குறட்பாக்கள் விகிதம் 133-அதிகாரங்களில் 1330-அருங்குறள் மலர்களைக் கொண்டு விளங்குகிறது. இது கடைச் சங்க காலத்து நூல்களாகிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகும். சாதி சமய வேறுபாடு இல்லாமல் அனைவருக்கும் நல்லொழுக்க முறைகளை விளக்குவது. இந்நூலில் இல்லாத எப்பொருளும் இல்லை; ஓதற்கு எளியது; உணர்தற்கு உரியது. இது **தமிழ் மறை, முப்பால், பொய்யா மொழி** எனப் பற்பல பெயர்களாலும் பாராட்டப்படுகிறது. இந்நூல் வடமொழி, இந்தி, தெலுங்கு, மலையாளம் முதலிய இந்திய மொழிகளிலும், லத்தீன், ஜெர்மன், ஆங்கிலம், பிரஞ்சு, முதலிய மேனாட்டு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளது. ‘ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி’ எனப் பாராட்டப்படுவதும் இதன் உயர்வை குறிப்பதாகும்.

இவ்வரிய நூலை இயற்றிய பெரியார், தெய்வப்புலவர் **திருவள்ளுவர்** ஆவார். இவர்க்கு இப்பெயர், இடுகுறியாகவும், தொழில் பற்றியும், பிறந்த குலம் பற்றியும் அமைந்தது எனப் பலவாறாகவும் கூறுவர். இவர்தம் வரலாறு திட்டமாக அறிவதற்கில்லை. இவர் மதுரையில் வாழ்ந்து வந்தார் எனவும், சென்னையை அடுத்த மயிலாப்பூரில் வாழ்ந்து வந்தார் எனவும் கூறுவர். இவர் **தெய்வப் புலவர், திருவள்ளுவர், நாயனார், தேவர்** எனப் பலவாற்றாலும் அழைக்கப்படுகின்றனர்.

‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்ட தமிழ் நாடு’ எனப் பாவலர் பெருமான் பாரதியார் பாராட்டியவாறு, வள்ளுவரால் தமிழ்நாடு வான்புகழ் பெற்று விளங்குகின்றது. இவரது காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்பர் ஆராய்ச்சியாளர்.

இத்தகைய சிறந்த நூலாகிய **திருக்குறள் மலரை** மாணவர்கள் இளமையிலேயே கற்றுத் தெளிதல் சிறப்புடைத்தாகும். இதுபற்றி அரசியலார் கொள்ளும் முயற்சி போற்றற்குரியது.

இச்சிறு புத்தகம் 16-6-48-ல் அரசியலாரால் திருத்தி வெளியிடப்பெற்ற பாடப் பட்டியின்படி தொகுக்கப்பட்டதாகும். மாணவர்களும், ஆசிரியப் பெருமக்களும், கல்லூரித் தலைவர்களும் இதனை ஆதரித்துப் போற்றுவார்களாக.

வாழ்க தமிழ் மொழி

அன்பன்,

திருச்சிராப்பள்ளி
26—8—48

வித்துவான் கோ. இரத்தினம் பிள்ளை

உ

தமிழ் வாழ்க

திருக்குறள் மலர்

இரண்டாம் இதழ்

மனக்கவலை மாற்றும் மருந்து

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

பதவுரை: தனக்கு உவமை இல்லாதான் - (எந்தவகையிலும்) தனக்கு ஒப்பு இல்லாதவனாகிய இறைவனது, தாள் - பாதங்களை, சேர்ந்தார்க்கு அல்லால் - (அன்புடன்) அடைந்து பூசிப்பவர்க்கு அல்லாமல், (மற்றவர்க்கு), மனக்கவலை - மனத்தில் தோன்றும் துன்பங்களை, மாற்றல் - நீக்குதல், அரிது - அரியது ஆகும், எ-று.

கருத்து: ஒப்பற்ற தலைவனான இறைவனது தாள்களை வணங்கி மனத்தில் நிகழும் துன்பங்களைப் போக்குதல் வேண்டும். தாளைச் சேராதார் மனக்கவலையால் வாட்டமுறுவர் என்பதாம். (1)

இன்பம் அடையும் இனிய வழி

அறத்தான் வருவதே இன்பம்;மற்(று) எல்லாம்
புறத்த புகழும் இல.

பதவுரை: அறத்தான் - அறத்தினோடு பொருந்தி, வருவதே - அமைவதுதான், இன்பம் - இன்பம் விளைவிப்பதாகும்; மற்று எல்லாம் - (அறத்தினோடு பொருந்தாது) மற்றவற்றால் அமைவது

அனைத்தும், புறத்த - துன்பம் தருவனவாம்; புகழும் இல - (அதுவே யல்லாமல்) புகழ் உடையனவும் அல்லவாம், எ-று.

கருத்து : இன்பம் அடைய அறத்தினைப் புரிதல் வேண்டும்.

அறம் - தருமம், இல்லறம். புறத்த - இன்பத்திற்குப் புறமான துன்பம் விளைவிப்பன. (2)

ஈன்ற அன்னை இன்புறும் இடம்

ஈன்ற பொழுதில் பெரி(து)உவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

பதவுரை : தன் மகனை - தன் மகனை, சான்றோன் என - (கல்வி கேள்விகளால் சிறந்த) அறிவுடையவன் என்று, கேட்ட தாய் - (அறிவுடையவர்கள் சொல்லக்) கேட்ட தாயானவள், ஈன்ற பொழுதில் - (தான் அம் மகனைப்) பெற்றெடுத்த காலத்தைக் காட்டிலும், பெரிது உவக்கும் - மிகவும் மகிழ்ச்சியடைவாள், எ-று.

கருத்து : மக்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குதல் தான் பெற்றோர்க்கு மகிழ்ச்சியை விளைவிக்கும்.

பெற்ற பொழுது அடையும் பொதுவான இன்பத்தைக் காட்டிலும் சான்றோன் என்று கேட்ட, சிறப்பான இன்பம் பெரிதாகும். சான்றோன் எனக் கூறத் தகுதிவாய்ந்தவர் அவர் ஆகையால் அறிவுடையோரால் என்பது வருவிக்கப்பட்டது. (3)

அன்பினை வெளிப்படுத்தும் ஆற்றல்

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்; ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும்.

பதவுரை : ஆர்வலர் - (தம்மால் நேசிக்கப்பட்டவர்களது துன்பத்தைக் கண்டு உள்ளம் வருந்துகின்ற) அன்புடையார் களது, புன் கண் நீர் - (கண்கள் பொழிகின்ற) துன்பக் கண்ணீரே, பூசல் தரும் - (அவர்கள் கொண்ட அன்பினை யாவரும் அறிய) வெளிப்படுத்தும்; (ஆதலின்), அன்பிற்கு - அன்பினுக்கு; அடைக்கும் -

(பிறர் அறியாமல்) அடைத்து வைத்திருக்கும்படியான, தாழும் உண்டோ - தாழ்ப்பாளும் உள்ளதோ ? (இல்லை), எ-று.

கருத்து : பிறர் துன்பங்கண்டு வருந்துபவர்தாம் அன்பு உள்ளம் படைத்தவர் ஆவார்.

ஆர்வலர் - அன்புள்ளம் கொண்டவர். புன் கண் நீர் - சிறு கண்ணீர்த்துளிகள், பூசல் - தூற்றல். (4)

உயிர் நிலைத்திருக்கும் இடம்

அன்பின் வழிய(து) உயிர்நிலை ; அஃ(து)இலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

பதவுரை : அன்பின் வழியது - அன்பு முதலாக அதன் வழித் தோன்றிய உடம்புதான், உயிர் நிலை - உயிர் நிலைத்துள்ள உடம்பு ஆகும் ; அஃது - அந்த அன்பு, இலார்க்கு - இல்லாதவர்க்கு, உடம்பு - (தோன்றிய) உடம்புகள், என்பு - எலும்பை, தோல் - தோலினால், போர்த்த - மூடியனவாம் ; (உயிர் நிலைத்த உடல்கள் அல்ல), எ-று.

கருத்து : அன்போடு கூடிய வாழ்க்கையையே சிறந்ததாகும். (5)

திருமகள் வாழும் இடம்

அகன்அமர்ந்து செய்யாள் உறையும் ; முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

பதவுரை : முகன் அமர்ந்து - முகம் மலர்ந்து, நல்விருந்து - தக்க விருந்தினரை, ஓம்புவான் - உபசரிப்பவனுடைய, இல் - வீட்டின் கண், செய்யாள் - திருமகள், அகன் அமர்ந்து - மனம் மகிழ்ந்து, உறையும் - வாழ்வாள், எ-று.

கருத்து : விருந்தினரை இனிய முகத்தோடு உபசரித்தல் வேண்டும்.

முகன், அகன் - முகம், அகம், போலி. விருந்து - புதிதாக வந்தவர். (6)

சிறந்ததோர் அணிகலம்

பணி(வு)உடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி;அல்ல மற்றுப் பிற.

பதவுரை : ஒருவற்கு - ஒருவனுக்கு, பணிவு உடையன் (யாவரிடத்தும்) தாழ்ச்சி உடையவனாய், இன் சொலன் ஆதல் - இனிய சொற்களையும் உடையவன் ஆதல், அணி - அழகாகும்; பிற - (இவ்விரண்டும் அல்லாத) பிற அணிகலன்களால் வரும் அழகு, அல்ல - அழகு அல்ல, எ-று.

கருத்து : அனைவரிடத்தும் தாழ்ச்சி உடையவனாய், இன்சொல் வழங்குதல் வேண்டும்.

அணி - ஆபரணம், அதனால்வரும் அழகு. மற்று-அசை. (7)

உலகத்தினும் பெரியது

காலத்தி னால்செய்த நன்றி சிறி(து)எனினும்
ஞாலத்தில் மாணப் பெரிது.

பதவுரை : காலத்தினால் - தக்க சமயத்திலே, செய்த - செய்யப் பெற்ற, நன்றி - உபகாரமானது, சிறிது எனினும் - (அளவால்) சிறியதாகக் காணப்பட்டாலும், (செய்யப்பட்ட காலத்தை நோக்கும் பொழுது), ஞாலத்தில் - இந் நிலவுலகைக் காட்டிலும், மாணப் பெரிது - மிகப் பெரியது ஆகும், எ-று.

கருத்து : பிறர் செய்த நன்றியை ஒருபோதும் மறத்தல் கூடாது.

காலத்தை நோக்கவேண்டுமே யல்லது பொருளை நோக்குதல் கூடாது என்பதாம். (8)

வணிகர்க்கேற்ற சிறந்த வாணிபம்

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்.

பதவுரை: பிறவும் - பிறர் பொருள்களையும், தமபோல் - தங்களது பொருள்களைப் போலக் கருதி, பேணிச் செயின் - பாது காத்தலைச் செய்வார்களாயின், (அச் செயலானது) வாணிகம் செய்வார்க்கு - வாணிகம் செய்பவர்கட்கு, வாணிகம் - (நல்ல ஊதியம் தரும்) வாணிகம் ஆகும், எ-று.

கருத்து: பிறர் பொருளையும் தம்பொருள் போல் கருதி வியாபாரம் செய்தல் வேண்டும்.

பேணிச் செய்தல் - கொள்வது மிகுதியாகவும் கொடுப்பது குறைவாகவும் இல்லாது ஒத்தவகையில் செய்தல். (9)

செல்வர்கட்கு இன்றியமையாதது

எல்லார்க்கும் நன்றும் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

பதவுரை: பணிதல் - அடக்கமாக இருத்தல், எல்லார்க்கும் - எல்லோருக்கும், நன்று ஆம் - நல்லது ஆகும், அவர் உள்ளும் - அவ் வெல்லாரிலும், செல்வர்க்கே - செல்வம் படைத்தவர்களுக்குத் தாம், (அவ்வடக்கமானது), செல்வம் - (மற்றும் ஒரு) செல்வ மாகும், தகைத்து - சிறப்பினை உடையது, எ-று.

கருத்து: செல்வர்களும் பணிவு உடையவர்களாக இருத்தல் வேண்டும். (10)

ஒழுக்கத்தின் உயர்வு

ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

பதவுரை: ஒழுக்கம் - நல் ஒழுக்கத்தை, உடைமை - பெற்றிருத் தலே, குடிமை - நல்ல குடியில் பிறத்தலாம்; இழுக்கம் - நல் ஒழுக்கத்தில் தவறுதல், இழிந்த பிறப்பாய் விடும் - தாழ்ந்த குடியில் பிறத்தலாகி விடும், எ-று.

கருத்து: நல்லொழுக்கம் உடையரே உயர்குடியில் பிறந்த வராவார்.

குடிமை - நல்லகுடியிற் பிறத்தல். இழுக்கம் - தவறுதல், (11)

ஒழுக்கம் உடையார் எய்தும் உயர்வு

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை ; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

பதவுரை : ஒழுக்கத்தின் - நல்லொழுக்கத்தினால், மேன்மை எய்துவர் - (ஒருவர்) உயர்வை அடைவார்; இழுக்கத்தின் - (அந்நல் லொழுக்கத்தில் தவறிய) தீயொழுக்கத்தால், எய்தா பழி - அடையத் தகாத பழியை, எய்துவர் - அடைவார்கள். எ - று.

கருத்து : நல்லொழுக்கம் உடையார் மேன்மை அடைவர். (12)

பொறுமையின் பெருமை

ஒறுத்தார்க்(கு) ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்.

பதவுரை : ஒறுத்தார்க்கு - (தமக்குத் தீங்கு செய்தவரைத்) தண்டித்தவர்க்கு, (உண்டாவது), ஒருநாளை இன்பம் - (அவ்வொரு நாளைய இன்பமேயாகும்; (ஆனால்), பொறுத்தார்க்கு - (அவர்களைப்) பொறுத்துக் கொண்டவர்கட்கு, பொன்றும் துணையும் - (உலகம்) அழியும் வரையிலும், புகழ் - புகழ் உண்டாகும், எ - று.

கருத்து : பிறர் செய்த தீமையைப் பொறுத்தலே நன்றாம்.

ஒரு நாள் இன்பம் - தண்டித்துவிட்டோம் என்று செருக்கினால் மகிழ்தல். (13)

பொறாமையின் இழிவு

அழுக்கா(று) எனஒரு பாவி திருச்செற்று
தீயுழி உய்த்து விடும்.

பதவுரை : அழுக்காறு என - பொறாமை என்று சொல்லப் பட்ட, ஒருபாவி - ஒப்பற்ற பாவத்தை உடையவன், திரு செற்று - (ஒருவனது) செல்வத்தை அழித்து, தீ உழி - (அவனையும்) தீய வழியுள், உய்த்துவிடும் - போக்கிவிடும், எ - று.

கருத்து : பொருமைப்படுபவன் தீமையையே அனுபவிப்பான்.

அழுக்காறு, செல்வத்தையுங் கெடுத்து அவனையும் துன்பத்துள் ஆழ்த்துமாதலின் பாவி என்று சொல்லப்பட்டது. துன்பம் செய்பவனை பாவி என்று கூறுதல் வழக்கம். (14)

திருமகள் விரும்பிச் சேரும் இடம்

அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன்அறிந்(து) ஆங்கே திரு.

பதவுரை : அறன் அறிந்து - (இது) தருமமாகும் என்று தெரிந்து, வெஃகா - (பிறர் பொருளை) விரும்பாத, அறிவுடையார் - அறிவு உடைய பெரியவர்களை, திரு - திருமகளானவள், திறன் - அறிந்து - (தான் அடையத்தக்க) தன்மையை அறிந்து, ஆங்கே - அப்பொழுதே, சேரும் - சேர்வாள், எ - று.

கருத்து : பிறர் பொருளை விரும்பாதவரிடத்தேதான் திருமகள் சேர்வாள்.

தன்மை அறிதல் - சேரக்கூடிய காலமும் இடமும் முறையும் அறிதல். (15)

புறங் கூறலின் தீமை

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்; நகச்சொல்லி
நட்பாடல் தேற்று தவர்.

பதவுரை : நகச்சொல்லி - (கூடி மகிழுமாறு) இனிமையாகப் பேசி, நட்பு ஆடல் - (அயலார்களோடு) நட்பு கொண்டு மகிழ்தலை, தேற்றாதார் - அறியாதவர்கள், பகச் சொல்லி - (தம்மைவிட்டு) நீங்கும்படி (புறங்) கூறி, கேளிர் - (தம்) உறவினரையும், பிரிப்பர் - பிரித்து விடுவார்கள், எ - று.

கருத்து : புறங் கூறுவார்க்கு அனைவரும் பகைவர் ஆவர்.

பகுதல் - நீங்குதல், நகல் - நட்புச் செய்தல், கேளிர் - உறவினர், நண்பர். (16)

தீவினைக்கு அஞ்சுதல்

இலன்என்று தீயவை செய்யற்க; செய்யின்
இலன்ஆகும் மற்றும் பெயர்த்து.

பதவுரை: இலன் என்று - (ஒருவன் யான்) எளியன் என்று (கருதி), தீயவை - தீமைகளை, செய்யற்க - (பிறர்க்குச்) செய்யாதிருப்பானாக; செய்யின் - (அவ்வாறு) செய்வானேயானால், பெயர்த்து - மீண்டும், இலன் ஆகும் - வறியவன் ஆவான், எ - று.

கருத்து: தீய செயல்களைச் செய்பவன் ஒருநாளும் மேன்மை அடையமாட்டான்.

ஏழை என்று கருதித் தீமை செய்வானேயானால், எளியவன் ஆவதோடு குணம், செயல்களிலும் குறைந்தவன் ஆவான் என்பதாம். மற்றும் - அசைநிலை, (17)

பயன்படக் கூடிய செல்வம்

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால்; செல்வம்
நயன்உடை யான்கண் படின்.

பதவுரை: செல்வம் - செல்வமானது, நயன் உடையான்கண் - பிறர்க்கு உபகாரம் செய்பவன் இடத்திலே, படின் - உண்டாகுமேயானால், (அது), பயன்மரம் - (அனைவர்க்கும்) பயன்படுகின்ற (ஒரு நல்ல) மரமானது. உள்ஊர் - ஊர் நடுவில் (நின்று), பழுத்து அற்று - பழுத்ததுபோலும் (பிறர்க்குப் பயன்படும்), எ - று.

கருத்து: பிறர்க்கு உதவவேண்டும் என்ற மனப்பண்புடையவர் செல்வம் அனைவர்க்கும் பயன்படும்.

பயன் - பிரயோசனம். நயன் - நன்மை. படுதல் - தோன்றுதல். ஆல் - அசைநிலை. (18)

ஈதலின் சிறப்பு

ஈத்(து)உவக்கும் இன்பம் அறியார்கொல்; தாம்உடைமை
வைத்(து)இழக்கும் வன்கண் அவர்.

பதவுரை: தாம் உடைமை - தாம் பெற்ற செல்வத்தை,

வைத்து - (யாசித்த வறியர்களுக்குக் கொடுக்காது) வைத்து, இழக்கும் - (பின் அப்பொருளை) இழக்கின்ற, வன்கண் அவர் - அருள் இல்லாத உலோபிகள், ஈந்து - (வறியவர்களுக்கு வேண்டிய வற்றைக்) கொடுத்து, உவக்கும் - (அவ்வறியவர் களிப்படைய, அதனைக் கண்டு அருளுடையவர்) மகிழ்ச்சி யடைகின்ற, இன்பம் - இன்பத்தினை, அறியார் கொல் - (கண்டு) அறியமாட்டார்களோ ? எ - று.

கருத்து : செல்வம் படைத்தவர் வறியவர்கட்கு வழங்கி வாழ்தல் வேண்டும்.

'ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்' என்றார் ஔவையாரும். இன்பம் அறிந்திருப்பாரானால், தாமும் அவ்வின்பத்தை அடைய விரும்புவாரே யல்லாமல் வைத்து இழக்கமாட்டார் என்பதாம். (19)

உயிர்கள் பெறவேண்டிய பயன்

ஈதல் இசைபட வாழ்தல்; அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

பதவுரை : இசைபட வாழ்தல் - (ஒருவர்) புகழ் உண்டாகும் படி வாழ்தலாவது, ஈதல் - (வறியவர்க்கு ஒன்று) ஈதலேயாகும்; உயிர்க்கு - மக்கட்கு, அது அல்லது - அப்புகழ் அல்லாமல், ஊதியம் - பயன் தரக்கூடியது, இல்லை - வேறு ஒன்றும் இல்லை, எ - று.

கருத்து : மற்றவர் புகழும்படி நாம் வாழ்தல் வேண்டும்.

உயிர் எனப் பொதுவாகக் கூறினும் மக்களையே குறிக்கும். புகழ் உண்டாக வாழ்வதற்குக், கல்வி, வீரம் முதலியன இருப்பினும் ஈதலே சிறப்புடைத்தாம். (20)

உள்ளத் தூய்மையே உயர்வைத் தரும்

வான்உயர் தோற்றம் எவன்செய்யும் ? தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின்.

பதவுரை : தான் அறி குற்றம் - (ஒருவன்) தான் அறிந்த குற்றத்திலே, தன் நெஞ்சம் படின் - தனது மனம் பொருந்துமானால்,

வான் உயர் தோற்றம் - (அவனது) வான் போன்ற உயர்ந்த தவ வேடம், எவன் செய்யும் - என்ன நன்மையைச் செய்யும்? (ஒரு நன்மையையும் செய்யாது), எ - று.

கருத்து: தான் குற்றம் என அறிந்தவற்றை நீக்கி ஒழுகுவதுதான் தவமாகும்.

வான் உயர் தோற்றம் - வானம் அளாவிய புகழுடைய தவ வேடம். உள்ளத் தூய்மையற்ற தவவேடம் ஊராரை மருட்டுதற்குத்தான் பயன்படும். 'மார்பிலே தாழ்வடம் மனத்திலே கரவடம்' என்பது பழமொழி. (21)

நஞ்செனக் கருத வேண்டியது

உள்ளத்தால் உள்ளலும் தீதே; பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

பதவுரை: உள்ளத்தால் - (ஒருவர் தம்) மனத்தினால், உள்ளலும் - (குற்றங்களை) நினைப்பதும், தீதே - பாவமே யாகும்; (ஆகையால்), பிறன் பொருளை - மற்றவர் பொருளை, கள்ளத்தால் - (அவர்க்குத்) தெரியாதபடி, கள்வேம் - (வஞ்சனையால்) அபகரிப்போம், எனல் - என்று நினைத்தலும் கூடாது, எ - று.

கருத்து: பிறர் பொருளைக் களவாடக் கருதவும் கூடாது. 'புலையும் கொலையும் களவும் தவிர்' என்பது ஔவையார் அமுதமொழி. (22)

சிறந்த விளக்கு

எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

பதவுரை: சான்றோர்க்கு - அறிவுடையோர்க்கு, எல்லா விளக்கும் - (கல்வி முதலியவற்றால் வரும்) எல்லா விளக்கங்களும், விளக்கு அல்ல - விளக்கங்கள் ஆகமாட்டா; பொய்யா விளக்கே - பொய் கூறாமை என்பதால் வரும் விளக்கமே, விளக்கு - சிறந்த விளக்கமாகும், எ - று.

கருத்து: பொய் கூருமையே அனைத்திலும் சிறந்தது ஆகும்.
விளக்கு - பிரகாசம், உயர்வு. (23)

கோபத்தினால் விளையும் கொடுமை

மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனால் வரும்.

பதவுரை: யார்மாட்டும் - யாவரிடத்திலும், வெகுளியை - கோபித்தலை, மறத்தல் - ஒழித்தல் வேண்டும்; (ஏனெனில்), அதனால் - அக்கோபத்தினால், தீய - தீங்குகள் எல்லாம், பிறத்தல் வரும் - தோன்றும், எ - று.

கருத்து: கோபத்தினை விடுதல் வேண்டும்.

யார் மாட்டும் - வலியார், ஒப்பானவர், மெலியார் என்ற மூவரிடத்திலும். 'ஆறுவது சினம்', 'தீராக் கோபம் போரா முடியும்' என்பவை மூதாட்டியார் வாக்கு. (24)

பிறர்க்குத் துன்பம் செய்யாமை

பிறர்க்(கு)இன்னா முற்பகல் செய்யின் தமக்(கு)இன்னா
பிற்பகல் தாமே வரும்.

பதவுரை: பிறர்க்கு - மற்றவர்க்கு, முற்பகல் - பகலின் முற்பொழுதிலே, இன்னா செய்யின் - துன்பங்கள் செய்வார்களே யானால், தமக்கு - (அத்துன்பங்கள் செய்த) தமக்கு, பிற்பகல் - அப்பகலின் பிற்பகுதியிலேயே, இன்னா - துன்பங்கள், தாமே வரும் - (பிறர் யாவரும் இயற்றாமல்) தாமாகவே வந்து சேரும், எ - று.

கருத்து: பிறர்க்குத் துன்பம் செய்தல் கூடாது.

பிறர்க்குத் துன்பஞ் செய்ய முற்பட்டால் அத்துன்பங்கள் எளிமையாகவும் விரைவாகவும் அவரையே வந்து அடையும் என்பதாம். 'கெடுவான் கேடு நினைப்பான்', 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பவை ஆன்றோர் அமுதமொழி.' (25)

அரசர் இயல்பு

அஞ்சாமை ஈகை அறி(வு)ஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்(கு) இயல்பு.

பதவுரை : வேந்தற்கு - அரசனுக்கு, இயல்பு - இயல்பாவது, அஞ்சாமை - மனவுறுதியும், ஈகை - கொடைத்தன்மையும், அறிவு - அறிவுடைமையும், ஊக்கம் - ஊக்கமும், இந்நான்கும் - (ஆகிய) இந் நான்கு குணங்களும், எஞ்சாமை - குறையாதிருத்தலாம், எ - று.

கருத்து : மனவுறுதியும், கொடைத்தன்மையும், அறிவுடைமையும், ஊக்கமும் கொண்டுள்ளவனே சிறந்த அரசனுவான்.

மனவுறுதி - அஞ்சா நெஞ்சம் படைத்தல், ஊக்கம் - மென்மேலும் செய்தல் வேண்டும் என்ற மனக்கிளர்ச்சி. (26)

கண்களைப் பெற்றவர்

கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்(து)இரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

பதவுரை : கண்ணுடையர் என்பவர் - கண்களைப் பெற்றுள்ளவர் என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவர், கற்றோர் - (உயர்ந்த நூல்களைக்) கற்றறிந்தவரே யாவர்; கல்லாதவர் - கல்வியறிவற்றவர்கள், முகத்து - (தம்) முகத்தின் கண், இரண்டு புண் - இரு புண்களை, உடையர் - பெற்றவர் ஆவர், (கண்களைப் பெற்றவர் ஆகார்), எ - று.

கருத்து : கற்றவரே சிறந்தவர் ஆவார்.

எவ்விடத்துப் பொருள்களையும், எக்காலத்திலுள்ளவற்றையும் அறியக்கூடிய ஞானக்கண்ணைப் பெற்றமையால் கற்றோர் கண்ணுடையவர் என்றும், அவ்வாறின்றி நோய் முதலியவற்றால் துன்பஞ் செய்யும் ஊனக் கண் ஒன்றே பெற்றுள்ளமையால் கல்லாதவர் புண்ணுடையர் என்றுங் கூறப்பட்டனர். (27)

அறிவு வளருந் தன்மை

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.

பதவுரை : மணற்கேணி - மணலின் கண் தோண்டப்பட்ட கேணியானது, தொட்ட அனைத்து - தோண்டிய அளவு, ஊறும் - (நீர்) ஊறும்: (அதுபோல), மாந்தர்க்கு - மக்களுக்கு, அறிவு - அறிவானது, கற்ற அனைத்து - (நூல்களைக்) கற்ற அளவாக, ஊறும் - உண்டாகும், எ - று.

கருத்து : சிறிது கற்றதோடு நில்லாமல் மேலும் மேலும் கற்றல் வேண்டும்.

தோண்டிய அளவுக்கு ஏற்ப மணிலில் நீர் சுரப்பது போல, படித்த அளவுக்கு ஏற்ப அறிவு வளரும் என்பதாம். கேணி - சிறு குளம், கேணி ஊறுதல் - கேணியில் நீர் ஊறுதல். 'தான் கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு' என்றார் ஔவையாரும். (28)

அவைக்கண் ஏறிப் பேசுதற்கு உரியவர்

அரங்(கு)இன்றி வட்(டு)ஆடி அற்றே ; நிரம்பிய
நூல்இன்றிக் கோட்டி கொளல்.

பதவுரை : நிரம்பிய நூல் இன்றி - நிறைந்த நூலறிவு இல்லாமல், கோட்டி - (ஒருவன்) அறிஞர்களது சபையில், கொளல் — (உரையாடுதலைக்) கொள்வதானது, அரங்கு இன்றி - இடத்தை அமைத்துக் கொள்ளாமல், வட்டு ஆடி அற்று - உருண்டை உருட்டி விளையாடுதலை ஒக்கும், (எ - று).

கருத்து : நூலறிவு உடையவரே சபையில் பேசுதற்கு உரியவர் ஆவர்.

அரங்கு - காய்கள் வந்து நிற்றற்குரிய இடம். வட்டாடல் - உருண்டை உருட்டல், கோலியாட்டம். வட்டு ஆடுதற்கு அரங்கு இன்றியமையாதவாறு போல, அவையில் புகுதற்கு நூலறிவு வேண்டும் என்பதாம். (29)

நிறைந்த பெருமையை அளிப்பது

எனைத்தானும் நல்லவை கேட்க ; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

பதவுரை : எனைத்து ஆன் உம் - (ஒருவன்) எத்துணைச் சிறிய தாக இருந்தாலும், நல்லவை - (அறிஞர்கள் கூறும்) நல்ல உறுதிப் பொருள்களைத் தருவன வற்றை, கேட்க - கேட்கக் கடவன்; (ஏனென்றால், அக்கேள்வியானது), அனைத்து ஆன் உம் - அவ் வளவே ஆனாலும், ஆன்ற - நிறைந்த, பெருமை – பெருமையை, தரும் - தரும், எ - று.

கருத்து : அறிஞர்கள் கூறுவதை அவசியம் கேட்டல் வேண்டும்.

கேட்கப்படுவன மிகச் சுருங்கிய காலத்தில் மிகச்சிறியன வாக இருந்தாலும், அவ்வளவிற்குப் பயன் கிடைக்கும்; பலதுளி பெருவெள்ளம் என்றாற்போல இக்கேள்வி ஞானமும் சிறிது சிறிதாகச் சேர்ந்து வளர்ந்து பயன் தருமாதலின், சிறியது என்று இகழாமல் கேட்க வேண்டும் என்பதாம். (30)

வருவது அறியும் வன்மை பெற்றவர்

அறிவுடையார் ஆவது அறிவார்; அறிவிலார்
அஃ(து)அறி கல்லா தவர்.

பதவுரை : அறிவு உடையார் - அறிவுடைய பெரியோர், ஆவது - (இனி) வரப்போவதை, அறிவார் - (முன் கூட்டி) அறிய வல்லவர் ஆவார், அறிவு இலார் - அறிவற்ற பேதைகள், அஃது – (இனி வரப்போவதாகிய) அதனை, அறி கல்லாதவர் - (முன்) அறிய மாட்டாதவர் ஆவார், எ - று.

கருத்து : வரப்போவதை அறிந்து நடப்பவரே அறிவு உடையவர் ஆவார்.

முன் அறிதல் - ஆராய்ந்து அறிதல்; ஆவது - நன்மை ஆவது எனவும் கூறலாம். (31)

குற்றமற்ற அரசன்

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.

IB 031,1C5(?) N48

பதவுரை : தன் குற்றம் நீக்கி - (ஒரு அரசன்) தன் குற்றத்தை (முதலில் கண்டு) நீக்கி, (பிறகு), பிறர் குற்றம் - பிறருடைய குற்றத்தையும், (காண) ஆராய்வானானால், இறைக்கு - அம்மன்னனுக்கு, ஆகும் - நேரிடும், குற்றம் குறைபாடு, என் - யாதுளது? (ஒன்றுமில்லை), எ-று.

கருத்து : தன் குற்றத்தைக் கண்டு நீக்கிய மன்னவனே சிறந்த அரசன் ஆவான்.

தன்குற்றத்தை நீக்காமல் பிறர்குற்றம் நீக்க முயலுதல் மன்னவனுக்குக் குற்றமாகும் என்பதாம். (32)

130148

வலிமையிலும் வலிமை

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை.

பதவுரை : தம்மின் - தம்மைக்கட்டிலும், பெரியார் - (அறிவு முதலியவற்றால் சிறந்த) பெரியவர்களை, தமரா - (தமக்குச்சிறந்த) துணைவராகக்கொண்டு, ஒழுகுதல் - (அவர்கூறிய நல்வழியில்) நடத்தலானது, (அரசர்க்கு), வன்மையுள் எல்லாம் - (மற்றைய பொருள், படை, கோட்டை முதலிய பாதுகாவல் என்ற இவற்றால் உண்டாகும்) எல்லா வலிமைகளிலும், தலை - தலைசிறந்த வலிமையாம், எ-று.

கருத்து : பெரியாரைத் துணையாகக் கொண்டு அவர்வழி நிற்றல் வேண்டும்.

ஏனைய வலிமைகள் மனிதரால் உண்டாகும் துன்பங்களையே போக்க வல்லன. ஆனால் பெரியாரின் துணையோ தெய்வத்தால் உண்டாகும் துன்பங்களையும் போக்கவல்லன என்பதாம். (33)

பேரும் புகழும் பெறுதற்குரிய வழி

மனத்தான்ஆம் மாந்தர்க்(கு) உணர்ச்சி; இனத்தான்ஆம்
இன்னான் எனப்படும் சொல்.

பதவுரை : மாந்தர்க்கு - மனிதர்க்கு, உணர்ச்சி - இயற்கை அறிவானது, மனத்தான் ஆம் - (அவரது) மனங்காரணமாக (அதற்கேற்ப) அமையும்; (உலகத்தாரால் ஒருவன்), இன்னுன் - இத்தன்மை வாய்ந்தவன், எனப்படும் சொல் - என்று சொல்லப்படும் சொல்லானது, இனத்தான் ஆம் - (அவன் சேர்ந்த இனங்காரணமாக (அதற்கேற்ப) உண்டாகும், எ-று.

கருத்து : சேரப்பட்ட இனம் காரணமாகப் பெயரும் புகழும் ஏற்படலால், சிறியாரைச் சேராது, பெரியாரைத் துணையாகக் கொள்ளல் வேண்டும்.

இன்னுன் எனப்படும் சொல் - இவன் நல்லவன், இவன் தீயவன் என அறிவுடையவரால் அழைக்கப்படும் சொல். (34)

வலிமையில்லாதவரும் வலிமை பெறுதல்

பீலிபெய் சாகாடும் அச்(சு)இறும்; அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

பதவுரை : பீலி - (மிகவும் இலேசான) மயிற் பீலி, பெய் - ஏற்றப்பட்டுள்ள, சாகாடும் - (வலிமைவாய்ந்த) வண்டியுங் கூட, அப் பண்டம் - அப்பீலியை, சாலமிகுத்து - மிகவும் அதிகமாக, பெயின் - ஏற்றினுல், அச்சு இறும் — அச்சு ஒடிந்து விடும், எ-று.

கருத்து : பகைவரின் வலிமையறிந்த பின்னர் போருக்குச் செல்லுதல் வேண்டும்.

இலேசான மயிற்பீலி யானுலும் மிகுதியாகுமேயானுல் வலிமைவாய்ந்த அச்சும் முறிந்து விடும் என்றமையால், வலிமையற்றவர்களே யானுலும் மிகப்பலராகக் கூடினுல் வலிமை வாய்ந்தவனும் அவர்க்கு ஈடுகொடுத்தல் இயலாது என்பதாம். (35)

காலமறிந்து காரியம் செய்தல்

கொக்(கு)ஒக்க கூம்பும் பருவத்து; மற்(று)அதன்
குத்(து)ஒக்க சீர்த்த இடத்து.

பதவுரை : கூம்பும் பருவத்து - (ஒருவன் தொழில் மேல் செல்லாது) அடங்கி இருக்கவேண்டிய காலத்தில், கொக்கு ஒக்க - கொக்கு இருப்பதுபோல அடங்கி இருக்கக் கடவன்; மற்று சீர்த்த இடத்து - மற்றைய செல்லவேண்டியகாலங் கிடைத்த பொழுது, அதன் குத்து ஒக்க - அக் கொக்கு தப்பாது செய்து முடித்தலைப் போல விரைந்து செய்து முடிக்கக் கடவன், எ-று.

கருத்து : அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்தக் கருமங்கள் ஆகாவாதலின், காலங்கருதிக் காரியஞ் செய்தல் வேண்டும்.

காலங் கிடைக்கும் வரையில் அமைதியாக இருந்து சமயம் வாய்க்கும் பொழுது விரைந்து முடித்தல் வேண்டும் என்பதாம்.
(36)

இடமறிந்து காரியம் இயற்றுதலின் சிறப்பு

**நெடும்புனலுள் வெல்லும் முதலை ; அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.**

பதவுரை : முதலை - முதலையானது, நெடும் புனல் உள் - ஆழமுள்ள நீரினுள்ளே இருக்குமானால், (பிற) வெல்லும் - பிறவற்றை எல்லாம் (தான்) வெல்லும்; புனலின் நீங்கின் - அந்நீரை விட்டு நீங்குமானால், அதனை - அம் முதலையை, பிற அடும் - பிற எல்லாம் வெல்லும், எ - று.

கருத்து : எதிரிகள் நிலைத்து நிற்க இயலாத இடமறிந்து அவர்மேல் போருக்கு எழுதல் வேண்டும்.

பிற விலங்குகள் நிலைத்து நிற்க இயலாத ஆழமான நீரில் முதலை மற்றவற்றை வெற்றி கொள்ளும்; ஆனால் தான் நிலைக்க முடியாத தரையினிடத்து எளிய நாயினாலும் வெல்லப்படும். ஆதலின், தாம் நிலைத்து நிற்கக்கூடிய இடத்தில் நின்று எதிரிகளை எதிர்க்க வேண்டும் என்பதாம்.
(37)

மக்களது பெருமை சிறுமைகளை அறியும் வழி

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

பதவுரை: பெருமைக்கும் - (மக்கள் அடைகின்ற) பெருமையாகிய பொன்னின் மாற்றை அறிதற்கும், ஏனை சிறுமைக்கும் - மற்றைய சிறுமையாகிய பொன்னின் மாற்றை அறிதற்கும், கட்டளை கல் - (சிறந்த) உரை கல் (யாதென்ருல்), தம் தம் கருமமே - அவரவர்கள் செய்கின்ற செயல்களே யாகும், எ-று.

கருத்து: மக்களது பெருமை சிறுமைகளை அவரவர் செயல்களே காட்டும்.

கருமத்தைக் கட்டளைக் கல் என்று கூறியதால், பெருமையையும் சிறுமையையும் பொன் எனக்கூறப்பட்டுளது. கட்டளைக் கல் – பொன்னினது மாற்று வேற்றுமை பார்க்கும் உரை கல். சிறந்த செயல்களைச் செய்து பெருமை யடைதல் வேண்டும் என்பதாம். (38)

நிறைந்த சுற்றம் உடையவர் தன்மை

பெருங்கொடையான் பேணன் வெகுளி அவனின்
மருங்(கு)உடையார் மாநிலத்து இல்.

பதவுரை: பெருங் கொடையன் - (ஒருவன்) மிகுந்த கொடையை உடையவனாய், வெகுளி பேணன் - கோபத்தை விரும்பாதவனுமாக இருப்பின், அவனின் - அவனைப் போல, மருங்கு - சுற்றத்தாரை, உடையார் - உடையவர்கள், மாநிலத்து - இந்நிலவுலகத்தின்கண், இல் - இல்லையாம், எ - று.

கருத்து: குறையாது கொடுப்பவனும், கோபம் கொள்ளாதவனுமே சிறந்த சுற்றத்தாரை உடையவன் ஆவான்.

பெருங்கொடை - ஒன்ருலும் குறையாது கொடுத்தல்; மருங்கு - பக்கம், பக்கத்திற் சூழும் சுற்றத்தாரை உணர்த்

திற்று. சுற்றத்தாரிடம் அன்புகொண்டு ஒழுகுதல் வேண்டும் என்பதாம். (39)

அரிய செயலையும் ஆற்ற வல்லவர்

அரியஎன்று ஆகாத இல்லை ;பொச்சாவாக்
கருவியால் போற்றிச் செயின்.

பதவுரை : பொச்சாவா - மறவாமை என்ற, கருவியால் - மனமாகிய கருவியால், போற்றி - நன்கு ஆலோசித்து, செயின் - செய்யப் பெற்ருல், (ஒருவர்க்கு), அரிய என்று - (இவை) செய்வதற்கு அரிய செயல்கள் என்று, ஆகாத - செய்ய இயலாத செயல்கள், இல்லை - ஒன்றும் இல்லை, எ - று.

கருத்து : இடைவிடாத நினைப்பும், தவருத சூழ்ச்சியும் உடையவர்கள் எதனையும் எளிதில் முடிக்க வல்லவர் ஆவார்.

பொச்சாவர்மை - மறவாமை. போற்றிச் செய்தல் - பாது காத்துச் செய்தல் ; கருவி - மனம், ஆயுதம் எடுத்த காரியத்தை முடிப்பதற்கு, மறவாமையும் ஆலோசனையும் வேண்டும் என்பதாம். (40)

மன்னவர்க்கு வெற்றியைத் தரும் ஆயுதம்

வேல்அன்று வென்றி தருவது ; மன்னவன்
கோல் ;அதூஉம் கோடா(து) எனின்.

பதவுரை : மன்னவன் - மன்னவனுக்கு, வென்றி தருவது - வெற்றியை உண்டாக்குவது, வேல் அன்று - (அவன் பகைவர்மேல் எறிகின்ற) வேல் அன்று ; (வென்றி தருவது) கோல் - வெற்றியைத் தருவது அவனது செங்கோலேயாகும் ; அதூஉம் - அச்செங்கோல் (வெற்றியைத் தரும் தன்மை வாய்ந்திருப்பதும்), கோடாது எனின் - கோணுது இருக்குமேயானுல், எ - று.

கருத்து: மன்னவன் செங்கோல் தவறாது அரசு புரிதல் வேண்டும்.

செங்கோல் தவறாமை - குடிமக்களைச் செவ்வையாகப் பாது காத்தல். கோடுதல் - வளைதல், மக்கட்குத் தீங்கு செய்தல். 'மன்னவற் கழகு செங்கோல் முறைமை' என்பது வெற்றி வேற்கை. (41)

கொடுங்கோல் ஆட்சியின் விளைவு

துளியின்மை ஞாலத்திற்கு எற்றுஅற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு.

பதவுரை: வாழும் உயிர்க்கு - (ஒரு மன்னவன் கீழ்) வாழும் மக்கட்கு, வேந்தன் - அந்நாட்டு மன்னவன், அளி இன்மை - (மக்களிடத்தில்) அன்பு இல்லாதிருத்தலானது, ஞாலத்திற்கு - உலகத்தில் வாழும் உயிர்கட்கு, துளி இன்மை - மழை பெய்யாதிருத்தல், எற்று - என்ன துன்பத்தை விளைவிக்குமோ, அற்று ஏ - அத்தகைய துன்பத்தையே விளைவிக்கும், எ - று.

கருத்து: கொடுங்கோல் மன்னவன் ஆட்சியில் மக்கள் துன்பமே அனுபவிப்பார்.

துளி - மழை; ஞாலம் – உலகம்; உலகத்தில் வாழும் உயிர்ப் பொருள்களைக் குறித்தது: உயிர் - மக்கள் உயிர். அளி - அன்பு, கருணை. மழையின்மை உயிர்களை வருத்துதல் போன்று அரசனது கொடுங்கோன்மை மக்களை வருத்தும் என்பதாம். 'கொடுங் கோல்மன்னன் வாழும் நாட்டின் கடும்புலி வாழும் காடு நன்றே' என்பது வெற்றிவேற்கை. (42)

அழியாத செல்வம்

உள்ளம் உடைமை உடைமை; பொருள்உடைமை
நில்லாது நீங்கி விடும்.

பதவுரை: உள்ளம் உடைமை - (ஒருவர்க்குத் தளராத) ஊக்கம் உடைமையையே, உடைமை - நிலைபெற்ற செல்வமாகும்;

பொருள் உடைமை - மற்றைய பொருள் முதலியவற்றை உடைமை யானது, நில்லாது - நிலைத்திராமல், நீங்கிவிடும் - அழிந்துவிடும்.

கருத்து: ஊக்கம் படைத்தவரே உயர்வை அடைவார்.

தளரா ஊக்கமே அழியாச் செல்வம் என்பதாம். உள்ளம் - மனம். மனத்திடம் தோன்றும் ஊக்கம் 'ஊக்கமது கைவிடேல்', 'ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு, என்பவை ஆன்றோர் அமுதமொழி. (43)

பகைவர்க்கு அடிமையாக்கும் பண்பு

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்(கு)
அடிமை புகுத்தி விடும்.

பதவுரை: மடிமை - சோம்பலானது, குடிமைக்கண் - (நற்) குடிப் பிறந்தானிடத்தில், தங்கின் - தங்கி நிற்குமேயாயின், (அவனை) தன் ஒன்னார்க்கு - தன் பகைவர்கட்கு, அடிமை - அடிமை யாக, புகுத்திவிடும் - ஆக்கிவிடும், எ - று.

கருத்து: சோம்பல் உடையவர் என்றும் உயர்வை அடைய மாட்டார்.

மடிமை - சோம்பல். சோம்பலினால் செய்தொழில்கள் அழியும். 'சோம்பித் திரியேல்', 'சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்' என்பவை முதியோர் முதுமொழி. (44)

அரிய செயலையும் ஆற்றுந் தன்மை

அருமை உடைத்(து)என்(று) அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

பதவுரை: அருமை உடைத்து என்று - (தம் சிறுமையைப் பார்த்து இச்செயல் நம்மால் செய்வதற்கு) அரியது ஆகும் என்று நினைத்து, அசாவாமை வேண்டும் - மனம் தளர்ச்சி அடையாது இருத்தல் வேண்டும்; (ஏனெனில்), பெருமை - (அதனைச் செய்து முடிப்பதற்கு ஏற்ற) பெருமையை, முயற்சி - முயற்சியானது, தரும் - (தமக்குத்) தரும், எ - று.

கருத்து : முயற்சி உடையவர் அரிய செயலையும் முடிக்கும் ஆற்றலைப் பெறுவார்.

அசாவாமை - மனந்தளராதிருத்தல். 'முயுற்சியுடையார் இகழ்ச்சி அடையார்' என்பது பழமொழி. (45)

எக்காலத்தும் துன்பம் எய்தாதவர்

இன்பம் விழையான் இடும்பை இயல்(பு)என்பான்
துன்பம் உறுதல் இலன்.

பதவுரை : இன்பம் - இன்பத்தை, விழையான் - விரும்பாதவனாய், இடும்பை - (வினையால் வரும்) துன்பங்களை, இயல்பு என்பான் - (வருதல்) இயல்பு என்று கருதி இருப்பவன், துன்பம் உறுதல் - துன்பம் அடைதல், இலன் - (என்றும்) இல்லாதவன் ஆவான், எ - று.

கருத்து : இன்ப துன்பங்களை ஒன்றாகவே எண்ணுதல் அறிஞர்க்கு அழகாகும்.

இன்பத்தை விரும்பினாலும், துன்பத்தை இயல்பு என்று எண்ணாமல் அதனைத் தடுக்க முயற்சித்தாலும் அவற்றால் துன்பமே உண்டாவதால் இவ்விரண்டும் செய்யாத அறிஞனைத் துன்பம் உறுதல் இலன் என்றார். 'ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்' என்பது வெற்றி வெற்கை. (46)

அமைச்சரது தன்மை

வன்கண் குடிகாத்தல் கற்(று)அறிதல் ஆள்வினையோ(டு)
ஐந்துடன் மாண்ட(து) அமைச்சு.

பதவுரை : வன்கண் - ஒருதொழிலைச் செய்வதில் தளராமையும், குடிகாத்தல் - குடிமக்களைக் காத்தலும், கற்று அறிதல் - சிறந்த நூல்களைக் கற்று அதன் பயன் அறிதலும், ஆள்வினையோடு - முயற்சியும், ஐந்துடன் - (முன்னர் அமைச்சர்க்குச் சிறந்த அங்கமாகக் கூறப்பட்டுள்ள, சேனை, பொருள், காலம், செய்யும்

வகை, செய்யுந் தொழில் என்ற) ஐந்துடனேயும், மாண்டது - மாட்சிமைப் பட்டவன், அமைச்சு - அமைச்சனுவான், எ - று.

கருத்து : தொழில் செய்வதில் தளராமை முதலிய அருங் குணங்கள் அமைந்தவனே சிறந்த அமைச்சனுவான்.

வன்கண் - அசையாமை, தளராமை. ஓடு - எண்ணுப் பொருளில் வந்தது. (47)

தீய செல்வத்தினும் வறுமையே சிறப்புடைத்து

பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை.

பதவுரை: பழிமலைந்து - (அறிவில்லாதார் தீய வினைகளைச் செய்து அதனுல்) பழியை மேற்கொண்டு, எய்திய - பெற்ற, ஆக்கத்தின் - செல்வத்தைக் காட்டிலும், சான்ருேர் - (தீவினைகளைச் செய்து அதனுல் பழியை மேற் கொள்ளாத) அறிவுடையவர், (அனுபவிக்கும்), கழிநல்குரவே - மிகுந்த வறுமையே, தலை - உயர்ந்தது ஆகும், எ - று

கருத்து : ஆயிரம் வருவதானுலும் தீவினைகளைச் செய்தல் கூடாது.

செல்வம் நிலையற்றது; பழியோ உலகம் உள்ள வரையிலும் நிலைத்திருக்கும். ஆதலின் நிலையாத செல்வத்தை நம்பி நிலைத்திருக்கும் பழியைத் தேடுதல் கூடாது என்பதாம். கழி - மிகுதியைக் காட்டும் உரிச்சொல். (48)

நினைத்தவாறே பெற வல்லவர்

எண்ணிய எண்ணியாங்கு எய்துப; எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

பதவுரை : எண்ணியார் - (ஒரு செயலைச்செய்ய) எண்ணியவர், திண்ணியர் ஆகப் பெறின் - (தாம் மேற் கொண்ட செயலில்) மனவுறுதி உடையவராக இருப்பார்களே யானுல், எண்ணிய -

(தாம் அடைய) நினைத்த பொருள் யாவற்றையும், எண்ணி(ய) ஆங்கு - (தாம் எண்ணியவாறே: எய்துப - எளிதில் அடைவார்கள், எ-று.

கருத்து: தொடங்கிய காரியத்தை மனவுறுதியுடன் நிறைவேற்றல் வேண்டும்.

மனவுறுதி உடையவர் எச்செயலையும் நிறைவேற்றும் வல்லமை பெற்றவர் ஆவார் என்பதாம். (49)

தொழிலைச் செய்யும் வகை

சூழ்ச்சி முடிவு துணி(வு)எய்தல்; அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

பதவுரை: சூழ்ச்சி - (ஒரு தொழிலைச் செய்வதற்காகச் செய்யப்படும்) ஆலோசனைக்கு, முடிவு - எல்லையாவது, துணிவு எய்தல் - (ஆலோசிப்பவன், இனி இது தப்பாது என்ற) நிச்சயம் பெறுதல் ஆகும்; அத்துணிவு - அவ்வாறு நிச்சயிக்கப்பெற்ற அத் தொழிலானது, தாழ்ச்சியுள் - (விரைதல் இன்றித்) தாமதத்தில், தங்குதல் - தங்குவதானது, தீது - குற்றம் உடையது ஆகும், எ-று.

கருத்து: ஒரு தொழிலை உணர்வு தோன்றும்வரை நன்கு ஆலோசித்துப் பின்னர் விரைந்து அதனை நிறை வேற்றுதல் வேண்டும்.

சூழ்ச்சி - ஆலோசனை; தாழ்ச்சி - தாமதம், செய்யுங் காலத்துச் செய்யாமை. (50)

உள்ளக்குறிப்பை உணர்த்தும் கண்ணாடி

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

பதவுரை: அடுத்தது - (தன்னை) அடுத்த பொருளின் நிறத்தை, காட்டும் - (தான் ஏற்றுக்கொண்டு) காட்டுகின்ற, பளிங்குபோல் - பளிங்கைப் போல, நெஞ்சம் - (ஒருவனது) நெஞ்சத்தில், கடுத்தது -

மிகுதிப்பட்ட குணத்தை, முகம் - (அவனது) முகமானது, காட்டும் - (தானே ஏற்றுக்கொண்டு) வெளிக் காட்டும், எ - று.

கருத்து : ஒருவனது உள்ளக்குறிப்பை அவனது முகமே காட்டிவிடும்.

பளிங்கு - ஒருவகைக் கல்; கண்ணுடியுமாம். அடுத்தல் - சேர்தல். மனம் களிப்புடன் இருந்தால் முகமலர்ந்தும், மனம் துயருற்றிருந்தால் முகம் வாடியும் இருக்கும் என்பதாம். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது பழமொழி. (51)

நாட்டிற்குரிய நலன்கள்

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்(வு)இலாச்
செல்வரும் சேர்வது நாடு.

பதவுரை : தள்ளா - குறையாத, விளையுளும் - விளைச்சலைச் செய்கின்ற உழவர்களும், தக்காரும் - தகுதிவாய்ந்த பெரியோரும், தாழ்வு இலா - குறைவு இல்லாத, செல்வரும் - செல்வத்தினையுடையவரும், சேர்வது - ஒன்று சேர்ந்து வாழும் (நாடுதான்), நாடு - நல்ல நாடாகும். எ - று.

கருத்து : உழவர்களும், அறிஞர்களும் பெருந்தன வணிகர்களும் கூடி வாழும் நாடே நன்னாடாகும்.

விளையுள் - பயிர் விளைச்சல், விளைச்சலைச் செய்யும் உழவர்கள். தக்கார் - அறிஞர். தாழ்வு இல்லாச் செல்வர் - பெரும்பொருள் ஈட்டும் வணிகர், நல்லவழியில் ஈட்டிய செல்வர். உணவுக்குறைவும், அறிவுக் குறைவும், பொருட் குறைவும் நாட்டின் கண் இல்லாதிருத்தல் வேண்டும் என்பதாம். (52)

நல்லவர் நட்பும் தீயவர் நட்பும்

நிறைநீர நீரவர் கேண்மை பிறை; மதிப்
பின்நீர பேதையார் நட்பு.

பதவுரை : நீரவர் - அறிவுடையாரது, கேண்மை - நட்புக்கள், பிறை நிறை நீர - (நிலவின்) பிறைகள் நிறையுந் தன்மைபோல நாள் தோறும் வளரும் தன்மையன; பேதையார் நட்பு - மற்றைய அறிவற்றவரின் நட்புக்கள், மதி - நிறைந்த மதி, பின் நீர - பின் குறையும் தன்மை போல நாள்தோறும் குறைந்து கொண்டே வரும், எ-று.

கருத்து : அறிஞர் நட்பு நாடோறும் வளரும். அறிவற்றவர் நட்பு நாடோறும் தேயும்.

நீரவர் - தன்மையுடையவர்; அறிஞர். கேண்மை - நட்பு. நீர - தன்மையை உடையன. நட்புசெய்வார் பலராதலின் நட்பும் பலவாயின. 'பெரியவர் கேண்மை பிறை போல நாளும், வரிசை வரிசையாய் நந்தும் - வரிசையால். வானூர் மதியம் போல் வைகலும் தேயுமே, தாமே சிறியார் தொடர்பு' என்பது நாலடியார். (53)

கொள்ளற்கும் விடுதற்கும் உரியவை

மருவுக மாசற்றார் கேண்மை; ஒன்(று)ஈத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

பதவுரை : மாசற்றார் - (உலகநடையை அறிந்து) குற்றமற்ற பெரியார்களுடைய, கேண்மை - நட்பை, மருவுக - ஏற்றுக் கொண்டு பழகுக; ஒப்பு இலார் - உலகநடைக்கு ஒப்பாக நடத்தல் இல்லாத சிறியாரது, நட்பு - நட்பினை, ஒன்று ஈத்தும் - (அவர் விரும்பும்) ஒரு பொருளைக் கொடுத்தாவது, ஒருவுக - நீக்குக, எ-று.

கருத்து : மேன்மக்கள் தொடர்பைக் கொள்ளுதல் வேண்டும்; கீழ் மக்கள் தொடர்பை ஒன்று கொடுத்தாயினும் நீக்குதல் வேண்டும்.

மருவுதல் - பழகுதல். ஒருவுதல் - நீக்குதல். 'நல்லிணக்கம் அல்லது அல்லற்படுத்தும்' என்பது ஔவையார் அமுதமொழி. (54)

குடிப்பிறந்தாரின் குணம்

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

பதவிரை : குடிப்பிறந்தார் - நற்குடிப்பிறந்தார், அடுக்கிய - பலவாக அடுக்கப் பெற்ற, கோடி பெறினும் - கோடி அளவினதாய பொருளைப் பெற்றாலும், குன்றுவ - (தம் ஒழுக்கம்) கெடுதற் கேதுவாய செயல்களை, செய்தல் இலர் - செய்யமாட்டார், எ-று.

கருத்து : பெருஞ் செல்வம் படைத்திருந்தாலும் குடிப் பிறந்தார் தம் ஒழுக்கத்தில் தவற மாட்டார். (55)

மானத்தின் மாண்பு

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின்.

பதவுரை : மயிர் - (தனது மயிர்த் திரளில்) ஒருமயிரை, நீப்பின் - இழந்தாலும், வாழா - உயிர் வாழாத, கவரிமா அன்னர் - கவரி மானை ஒத்த மானமுடையவர்கள், மானம் வரின் - தமது மானம் (உயிர் போவதால்) வருவதாக இருப்பின், உயிர் நீப்பர் - அவ் வுயிரைத் தாங்காது இழப்பார், எ-று.

கருத்து : உயிரைக்கொடுத்தும் மானத்தைக் காத்தல் வேண்டும்.

கவரிமா - ஒருவகை மான் ; தன் வால் மயிரில் ஒன்றை இழந் தாலும், அது தன் பெருமைக்கு இழிவு என்று கருதி உயிரை விடுமாம். இவ்வுவமையால் உயர்குடிப்பிறந்தார் மானம் போற்ற உயிரையும் விடுவார் என்பதாம். (56)

பெரியாரும் சிறியாரும்

மேல்இருந்தும் மேல்அல்லார் மேல்அல்லர் ; கீழ்இருந்தும்
கீழ்அல்லார் கீழ்அல் லவர்

பதவுரை : மேல் அல்லார் - (செய்தற்கரிய செய்ய இயலாது) சிறியவர் ஆயினர், மேல் இருந்தும் - மேலான இடத்தில் இருந்தாலும், மேல் அல்லர் - மேலானவர் ஆகமாட்டார், கீழ் அல்லர் - அரிய செயலைச் செய்து உயர்ந்த பெரியவர். கீழ் இருந்தும் - கீழான இடத்தில் இருந்தாலும், கீழ் அல்லவர் - கீழானவர் ஆகமாட்டார், எ - று.

கருத்து : செய்கையால் சிறந்தவரே பெரியவர் ஆவார்.

மேல் இருத்தல், கீழிருத்தல் - செல்வம், வறுமை முதலியன. மேல், கீழ் - பெருமையும் சிறுமையும். 'பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்' சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர், என்பது வெற்றி வேற்கை. (57)

சால்பெனும் பாரம் தாங்குந் தூண்கள்

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ(டு)
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

பதவுரை : அன்பு - (அனைவரிடத்தும் கொண்ட) அன்பும், நாண் - (பழி பாவங்கட்கு) நாணுதலும், ஒப்புரவு - (யாவர்க்கும்) உதவுதலும், கண்ணோட்டம் - (முன் பழகினவரிடத்தில் கொள்ளும்) தாட்சிணியமும், வாய்மை, ஒடு - எவ்விடத்திலும் மெய்யைக் கூறுதலும் என்று சொல்லப்பட்ட, ஐந்து - ஐந்து குணங்களும், சால்பு - (பல குணங்களாலும் நிறைந்துள்ள) சால்பு என்ற பாரத்தினை, ஊன்றிய - தாங்கிய, தூண் - தூண்கள் எனப்படும், எ-று.

கருத்து : அன்பு முதலிய அருங்குணங்கள் ஐந்துங் கொண்டவரே சான்றோர் ஆவார்.

ஊன்றுதல் - தாங்குதல். குணங்களைத் தூண் என்றதால் சால்பு பாரமெனப்பட்டது. தூண் இல்லாவிடில் பாரம் நிலைக்காதது போன்று, இக் குணங்கள் இல்லாவிடில் சால்பும் இல்லையாம். (58)

உலகு விரும்பும் உயர் குணத்தான்

**குற்றம் இலனுய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.**

பதவுரை : குற்றம் இலனுய் - குற்றங்களைச் செய்யாதவனுய், குடி - தன் குடியை, செய்து - உயரச் செய்து, வாழ்வானை - நடப்பவனை, உலகு - உலகத்தார், சுற்றமா - தமக்கு உற்ற சுற்றமாக விரும்பி, சுற்றும் - (தாமே சென்று) சூழ்வார்கள், எ - று.

கருத்து : தான் தோன்றிய குடி உயர உலகத்தாரைத் தழுவி வாழ்க்கையை நடத்துதல் வேண்டும்.

குற்றங்கள் - தருமத்திற்கும் நீதி நூலுக்கும் மாறுபாடான செய்கைகள். குடி செய்தல் - குடியை உயரச் செய்தல். (59)

உழவர்தம் சிறப்பு

**இரவார் : இரப்பார்க்(கு) ஒன்(று) ஈவர் கரவாது ;
கைசெய்(து)ஊண் மாலை யவர்.**

பதவுரை : கைசெய்து - (தம்) கையால் (உழுதலைச்) செய்து, ஊண் - உண்பதை, மாலையவர் - தன்மையாகக்கொண்ட உழவர்கள், இரவார் - (பிறரிடம் சென்று) இரத்தலைச் செய்யார்; (அதுவேயன்றி) இரப்பார்க்கு - (தம்மிடம் வந்து) இரக்கின்றவர்கட்கு, ஒன்று - (அவர் விரும்பும்) ஒன்றினை, கரவாது ஈவார் - ஒளிக்காமல் கொடுப்பார்கள், எ - று.

கருத்து : உழவர்கட்கு ஒரு பொழுதும் குறைவில்லை.

கரத்தல் - மறைத்தல். மாலை - தன்மை; ஒழுங்கு. உழவுச் செல்வம் ஒருபொழுதும் அழியாது என்பதாம். (60)

முற்றிற்று

021,1(5.17) N48
30148

செய்யுள் முதற்குறிப்பகராதி

செய்யுள்	பக்கம்	செய்யுள்	பக்கம்
அகனமர்ந்து செய் ...	3	காலத்தினாற் செய் ...	4
அஞ்சாமை ஈகை ...	11	குற்றமிலனாய் ...	29
அடுக்கிய கோடி ...	27	கொக்கொக்க ...	16
அடுத்தது காட்டும் ...	24	சூழ்ச்சி முடிவு ...	24
அரங்கின்றி வட் ...	13	தம்மிற் பெரி ...	15
அரிய வென்று ...	19	தள்ளாவிளை ...	25
அருமையுடைத் ...	21	தனக்குவமை இல் ...	1
அழுக்கா றென ...	6	தன்குற்றம் ...	14
அறத்தான் வரு ...	1	துளியின்மை ...	20
அறனறிந்து வெ ...	7	தொட்டனைத் தூ ...	12
அறிவுடையார் ...	14	நிறைநீர நீரவர் ...	25
அன்பிற்கு முண் ...	2	நெடும்புனலுள் ...	17
அன்பின் வழியது ...	3	பகச் சொல்லிக் ...	7
அன்பு நாண் ...	28	பணிவுடையன் இன் ...	4
இரவார் இரப் ...	29	பயன்மரம் உள் ...	8
இலனென்று தீய ...	8	பழிமலைந்து எய் ...	23
இன்பம் விழை ...	22	பிறர்க்கின்னா ...	11
ஈதல் இசைபட ...	9	பீலிபெய் சா ...	16
ஈத்துவக்கு மின் ...	8	பெருங்கொடை ...	18
ஈன்ற பொழுதில் ...	2	பெருமைக்கும் ...	18
உள்ளத்தால் உள் ...	10	மடிமை குடிமை ...	21
உள்ளமுடைமை ...	20	மயிர் நீப்பின் ...	27
எண்ணிய எண் ...	23	மருவுக மாசற்றார் ...	26
எல்லார்க்கும் நன் ...	5	மறத்தல் வெகுளி ...	11
எல்லா விளக்கும் ...	10	மனத்தானாம் ...	15
எனைத்தானும் நல் ...	13	மேலிருந்தும் மேலல் ...	27
ஒழுக்கத்தி னெய்து ...	6	வன்கண் குடி ...	22
ஒழுக்கம் உடைமை ...	5	வாணிகம் செய் ...	4
ஒறுத்தார்க்கு ஒரு ...	6	வானுயர் தோற் ...	9
கண்ணுடைய ரென் ...	12	வேலன்று வென்றி ...	19

KABEER PRINTING WORKS, TRIPLICANE, MADRAS.

THIRUKKURAL MALAR

VILAKAVURAI

BY

Vidwan G. RATHINAM PILLAI

First Book for Std.	VI or	I Form	Rs.	0—3—0
Second Book for ,,	VII or	II ,,	,,	0—4—0
Third Book for ,,	VIII or	III ,,	,,	0—5—0
Fourth Book for Form		IV ,,	,,	0—6—0
Fifth Book for ,,		V ,,	,,	0—7—0

T. G. GOPAUL PILLAI
PUBLISHERS
TEPPAKULAM : : 2/27, BROADWAY
TIRUCHIRAPALLI : : MADRAS 1